**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 103/2020

PW - 2

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | குணேஷ் |
| க.பெ. (அ) த.பெ. | மோகன்ராஜ் |
| வயது | 27 |
| முகவரி | குமாரனூர், பாலக்காடு |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 2 ம் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| மசாஆ 17 | எனது பெயரிலுள்ள ஆதார் அட்டை நகல் (ஒப்பீடு செய்யப்பட்டது) |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 2020 ம் ஆண்டு நடைபெற்றது என்றால் சரிதான் அப்போது எனக்கு வயது 22 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சென்ற யாருக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் சரியல்ல அதில் ஒரு நபருக்கு திருமணம் ஆகிவிட்டது.

இறந்து போன சுலைமான் எனக்கு நண்பரா என்றால் இல்லை, எனது அண்ணன் முத்துக்குமாரின் நண்பர். பட்டுக்கோட்டையில் யாருக்காக கார் வாங்க சென்றோம் எனகேட்டால் முத்துக்குமாருக்கு கார் வாங்க சென்றோம் அந்த விவரத்தை புகாரில் குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை முத்துக்குமார் என்னுடன் வந்தாரா என்றால் வந்தார். நான் காரில் எந்த இடத்தில் உட்கார்ந்து வந்தேன் என கேட்டால் ஓட்டுநரின் பின்புறம் உட்கார்ந்து வந்தேன். விபத்து எப்போது நடைபெற்றது என கேட்டால் மாலை சுமார் 5 மணியளவில் நடைபெற்றது. புகாரில் 7 மணி என குறிப்பிட்டிருந்தால் அது பொய் என்று சொன்னால் சரிதான். இரவு நேரம் என்பதால் ஓட்டுநரின் பின்புறம் உட்கார்ந்து வந்ததால் என்ன நடந்தது என்ற விவரம் தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல, நான் நேரடியாக விபத்தை பார்த்தேன் மாலை 5 மணி என்பதால் நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். பொள்ளாச்சி வருவதற்காக அன்சாத் வாகனத்தை ஓட்ட கரூர் டு மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அரவக்குறிச்சி அருகே வடக்கிலிருந்து தெற்காக வந்து தடாகோவில் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை கடக்க முற்படும் போது மதுரை டு கரூர் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஆம்னி பஸ் வந்த நிலையில் நாங்கள் சென்ற காரின் ஓட்டுநர் தான் தீடிரென்று வாகனத்தை ஓட்டிய காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல எங்கள் வாகனம் சிக்னலில் நின்று கொண்டிருந்த போது எடுத்த போது ஆம்னி பஸ்ஸானது வேகமாக வந்து காரின் மீது மோதிவிட்டது. எங்கள் வாகனம்

நின்றுகொண்டிருந்த இடத்தில் வேகத்தடை இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட விவரத்தை புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முழு காரணம் காரின் ஓட்டுநரின் அஜாக்கரதையால் தான் ஏற்பட்டது என்றும் காரானது புதிதாக எடுக்கப்பட்ட நிலையில் அது காரின் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்றும் விபத்திற்கு பின்னிட்டு நான் முந்திக்கொண்டு ஆம்னி பஸ் ஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஆம்னி பஸ்ஸில் பயணிகள் இருந்த நிலையில பேருந்தின் ஓட்டுநர் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் மேலும் ஆம்னி பஸ் ஓட்டுநருக்கு அனுபவம் உள்ள நிலையில் நான் சென்ற காரின் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக ஓட்டு விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. காரில் இருந்த நபர்கள் இளைய வயது நபர்கள் என்றும், காரின் ஓட்டுநர் தான் பேருந்தை கவனிக்காமல் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆம்னி பஸ் ஓட்டுநர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>6ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆம்னி பஸ்ஸின் பதிவெண் GJ 01 FT 6175 என்று சொன்னால் சரிதான். அந்த பேருந்தானது குஜராத்திலிருந்து தமிழகத்திற்கு வந்த பேருந்து என்றால் சரிதான். அந்த பேருந்தில் பயணிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல, இருந்தார்கள். அந்த

பேருந்தானது குஜராத்திலிருந்து தமிழகத்திற்கு வந்த நிலையில் தமிழக ரோட்டை பொருத்து தெரியாத நிலையில் அவர் தான் கவனக்குறைவாக பேருந்தை இயக்கி விபத்திற்கு காரணம் என்றால் சரிதான். நான் சென்ற காரின் ஓட்டுநர் வாகனத்தை மெதுவாக ஓட்டி சென்றார் என்றும் 6ம் எதிர்மனுதாரர் தான் கவனக்குறைவாக பேருந்தை இயக்கி விபத்தைஏற்படுத்தி விட்டார் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை போடப்பட்டது என்றால் சரிதான் போலிசார் விசாரணை செய்து ஆம்னி பஸ்ஸின் ஓட்டுநர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி